23rd February 1961]

* 419 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : கனம் மின்சார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தனியார் நடத்தும் பஸ் ரூட்டுகளையெல்லாம் பஞ்சாயத்து யூனியன்களுக்கு ஒப்படைக்க உத்தேசமுண்டா ?

(இ) (அல்லது) சர்க்காரே நடத்த உத்தேசமுண்டா ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) No, Sir.

(*b*) Yes Sir, by stages consistent with the Government's policy of progressive nationalisation

SRI V. K. KOTHANDARAMAN : மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் வெற்றிகரமாக நிறைவேறவேண்டுமானால் அதிகப்படியாக வரிகளை மக்கள்மீது திணிக்கவேண்டுமென்று சொல்லப்படுவதால், 1962-ம் வருட தேர்தலுக்குப் பிறகாவது பஞ்சாயத்து யூனியன்களுக்கு இந்தப் பொறுப்புகளெல்லாம் ஒப்படைக்கப்படுமா ?

THE HON. SRI V. RAMAIAH : பஞ்சாயத்து யூனியனுக்குக் கொடுப்பதைக் காட்டிலும், கனம் அங்கத்தினர் நிதி வசதியைக் கூறக்கூடிய காரணத்தால், இப்பொழுது புதுக் கொள்கைப்படி—ப்ரொக்ரெஸிவ் நாஷனலைஸேஷன்படி—அரசாங்கமே பஸ் ரூட்களை எடுத்துக்கொண்டு வருகிறது.

SRI P. M. MUNUSAMI GOUNDER : தனியார் நடத்தும் பஸ் ஸர்வீசுக்கும் சர்க்கார் நடத்தும் பஸ் ஸர்விசுக்கும் என்ன வித்தியாசம் இருக்கிறது என்பதை கனம் அமைச்சர் அவர்கள் சொல்வார்களா ?

THE HON. SRI V. RAMAIAH : தனியார் அரசாங்கத்திடமிருந்து பஸ் பர்மிட் பெற்று நடத்துகிறார்கள். அதிலிருந்து அரசாங்கத்திற்கு வரி வருகிறது. சர்க்கார் நடத்தக்கூடிய பஸ் ஸர்விஸ் என்றால் அரசாங்கமே நேரடியாக நடத்துகிறது ; வரியும், அதிலே வரக்கூடிய லாபமும் அரசாங்கத்திற்குக் கிடைக்கிறது.

SRI M. C. MUTHUKUMARASWAMY : ஹரிஜனங்களுக்கு விசேஷ சலுகை கொடுத்து பஸ் பர்மிட் வழங்க அரசாங்கம் உத்தேசித்திருக்கிறதா ?

MR. SPEAKER : மூலக் கேள்வி பஞ்சாயத்து யூனியனைப் பற்றியது ; ஹரிஜனங்களைப் பற்றியது அல்ல.

SRI T. SAMPATH : Is there any proposal to nationalise shorter routes?

THE HON. SRI V. RAMAIAH : The present policy has just been announced. We intend to nationalise all the long routes.

[23rd February 1961

SRI A. A. RASHEED : May I know whether there is a proposal to allow municipalities to run buses?

THE HON. SRI V. RAMAIAH : No, Sir.

* 420 Q.—SRI S. M. ANNAMALAI (on behalf of SRI M. P. SARATHI) : கனம் மின்சார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) புதிய பஸ் ரூட்டுகள் வழங்குவதில் மாஜி ராணுவத்தினர் கூட்டுறவு பஸ் போக்குவரத்து ஸ்தாபனங்களுக்கு எத்தகைய சலுகை காட்டப்படுகிறது?

(இ) இந்தச் சலுகைகளை இன்னும் அதிகரிக்க உத்தேசம் உண்டா?

THE HON. SRI V. RAMAIAH : (a) The Motor Vehicles Act provides that, other conditions being equal, an application for a stage carriage permit from a co-operative society shall, as far as may be, given preference over applications from individual owners. Permits for stage carriages are granted on the basis of marks awarded to the applicants. Out of a total of 3 marks, one mark is set apart for the applicant being a registered co-operative society or a registered public limited company or a registered private company. Preference is shown to the Motor Transport Co-operative Societies for Ex-Servicemen with reference to the provisions referred to above.

(b) No, Sir.

SRI S. M. ANNAMALAI : ராணுவத்தில் இருந்தவர்களுக்கு தனிச்சலுகை ஏதாவது தரப்படுகிறதா? கூட்டுறவு சங்கங்களுக்குத் தரப்படுகிற சலுகைதான் அவர்களுக்கும் தரப்படுகிறதே தவிர, ராணுவத்தில் சேவை புரிந்ததற்காக தனிச்சலுகை தரப்படவில்லை. அதற்குக் காரணம் என்ன?

THE HON. SRI V. RAMAIAH : ராணுவத்தில் இருந்தவர்களுக்குக் கூட்டுறவு சொஸைட்டிகள் அமைத்துக் கொடுக்கிறார்கள். அந்தக் கூட்டுறவு சொஸைட்டிகளுக்குப் பஸ் பர்மிட் வழங்குவதில் ஒரு சலுகை காட்டப்படுகிறது.

SRI T. R. RAMAMIRTHA THONDAMAN : தேச விடுதலைக்காக சுதந்திரப் போராட்டங்களில் ஈடுபட்ட தியாகிகளையும் அவர்கள் வரவுகளையும் கூட்டுறவு இயக்கத்தில் இணைத்து அவர்களுக்கு முதல் சலுகை அளித்து பஸ் பர்மிட் கொடுக்கவும், கொடுத்தாலுங்கூட, அதை அனுபவிக்க முடியாதபடி கோர்ட்டுகளில் தகராறு செய்கிறார்கள் பஸ் முதலாளிகள். அத்தகைய இன்னலைத் துடைத்து, தியாகிகளுக்குப் பாதுகாப்பு அளிக்க சர்க்கார் முன் வருவார்களா?

THE HON. SRI V. RAMAIAH : கனம் அங்கத்தினர் அவர்கள் தியாகிகளுக்கு நன்மை செய்யவேண்டுமென்று கருதினால், தியாகிகளெல்லோரையும் ஒன்றாக ஒரு கூட்டுறவு சொஸைட்டி அடிப்படையில்கொண்டுவந்து, கூட்டுறவு சொஸைட்டிகளுக்குக் கிடைக்கும் சலுகைகளைப் பெறுவதற்கு முயற்சி செய்யலாம்.